# கல்கியின் பொன்னியின் செல்வன் காமிக்ஸ்



கல்கியின்


# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்

நிலா

காமிக்ஸ்

www.nilacomics.com


வணக்கம்...
நான் கிருஷ்ணமூர்த்தி. பொன்னியின் செல்வனின் வாசகர்களுக்கு என் வணக்கம். உங்களை ஆயிரம் ஆண்டுகள் பின்னுக்கு அழைத்துச் செல்லப்போகிறேன். அது எப்படி சாத்தியம் என்று நீங்கள் எண்ணலாம். என்னுடன் சில ஓவியர்களின் துணை கொண்டு, அது சாத்தியப்படுமா என முயற்சித்துப் பார்க்க போகிறேன்....



சுந்தர சோழருக்கும், வானமா தேவிக்கும் மூன்று குழந்தைகள் பிறக்கின்றன. சுந்தர சோழரின் மீதும் அவரின் வாரிசுகளின் மீதும் மக்கள் அபரிமிதமான நம்பிக்கையும், அன்பையும் வைத்திருக்கின்றார்கள். ஒரு நாள் திடீரென்று சுந்தர சோழ மகாராஜாவுக்கு உடல் நலக்குறைவு ஏற்படுகிறது. இவ்வேளையில் பகைவர்களின் படையெடுப்பை தடுக்கவும், சோழ நாட்டின் எல்லையை விரிவுபடுத்தவும், எண்ணி மூத்த புதல்வன் ஆதித்த கரிகாலனை வட திசையின் மாதண்ட நாயகராக்கி அவனை காஞ்சிக்கும், இளைய புதல்வன் அருள்மொழி வர்மனை தென் திசையின் மாதண்ட நாயகராக்கி இலங்கைக்கும் அனுப்பி வைக்கிறார். இளவரசி குந்தவை சோழ நாட்டிலேயே இருந்து சோழ நாட்டின் நிர்வாகத்தை மந்திரி அநிருத்த பிரம்மராயருடன் இணைந்து கவனித்து வருகிறார்.
காஞ்சியிலிருக்கும் பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலருக்கு, தனது தந்தையான சுந்தர சோழ மகாராஜாவை, தனாதிகாரியாக விளங்கும் பெரிய பழுவேட்டரையர் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக செய்தி எட்டுகிறது. இதை கேட்ட இளவரசர் கொதித்தெழுகிறார். தன் பாட்டன் மலையமானின் வழிகாட்டுதலின் பேரில் தனது நண்பன் வந்தியத்தேவனை ஒற்றனாக தேர்வு செய்து தலைநகரான தஞ்சைக்கு அனுப்புகிறான். நமது நாயகனான வந்தியத்தேவன் வீராண ஏரிக்கரை வழியாக வந்து கொண்டிருக்கிறான். வாருங்கள் வீராண ஏரிக்கரையில் அவனை வரவேற்போம்.




வாசகர்களே, கொஞ்சம் நில்லுங்கள், உங்களுக்கு ஒரு முக்கிய செய்தியை சொல்லியாக வேண்டும். இன்று தண்ணீரை நீல தங்கம் என்று வர்ணிக்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். அதை அன்றே உணர்ந்தவர்கள் நமது சோழர்கள். அதற்கு மிகச் சிறந்த சான்று கரிகாலனின் கல்லணையும், இராஜாதித்தனின் வீராணமும். இப்போது நாம் வீராணம் ஏரி பிறந்த வரலாற்றை கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

பராந்தக சக்கரவர்த்தியின் மூத்த புதல்வர் இராஜாதித்தர் வட நாட்டின் மீது படையெடுத்து செல்ல ஒரு பெரும் படை திரட்டுகிறார். வீரர்களுக்கான பயிற்சி திருமுனைப்பாடி நாட்டில் நடைபெற்றது. அப்பகுதி மக்களின் விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆனால், அதையெல்லாம் அப்பகுதி மக்கள் பொருட்படுத்தவில்லை. இவர்களின் போர் பயிற்சிக்கு மக்கள் உறுதுணையாக இருக்கிறார்கள். இத்தகைய மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு காலத்தால் மக்களுக்கு பயன்படும் வகையில் போர் பயிற்சியின் இடைப்பட்ட நேரத்தில் தன் வீரர்களைக் கொண்டு இந்த கடல் போன்ற வீராண ஏரியை உருவாக்கினார்கள் சோழர்கள். நீர் மேலாண்மையை நன்கு உணர்ந்திருந்தார்கள் என்பதற்கு இவ்வீராணம் ஏரியே சான்று...








வீராணம் ஏரி பராந்தக சோழரின் ஆட்சி காலத்தில் (907 - 950) உருவாக்கப்பட்டது. இது தமிழ் நாட்டின் கடலூர் மாவட்டத்தில் உள்ளது. இதன் நீளம் 11.2 கி.மீ, அகலம் 14 கி.மீ உள்ளது. இதன் கொள்ளளவு 1,445 மில்லியன் கன அடி நீர் ஆகும்.


வீராணம் ஏரி.
அன்று ஆடி பதினெட்டு. மக்கள் கூட்டம், கூட்டமாக விழாவை கொண்டாட ஏரிக்கரைக்கு வருகிறார்கள்.
ஏய்ய்...
ஏய்ய்...
ஜல்... ஜல்... ஜல்...
மேளதாளங்களுடன், வாழை மட்டையால் செய்த சப்பரங்களை இழுத்து கொண்டு வருகிறார்கள்.


வீராணம் ஏரியின் புது வெள்ளத்தில்,
சிறுவர்கள் குளித்து மகிழ்கிறார்கள்.


சோழ நாட்டில் மண் வளமும், நீர் வளமும் சிறப்பாக இருந்ததால் மக்கள் விவசாயத்தில் முன்னோடியாக திகழ்கிறார்கள்.


உழவன் விதை நெல் தெளிக்கிறான். பெண்கள் புல் கட்டு சுமந்து செல்கிறார்கள்.


நமது நாயகன் வந்தியத்தேவன் சோழ நாட்டு வளங்களை ரசித்துக்கொண்டு வருகிறான்.
இங்கு பாருங்கள், ஒரு உழவன் வாய்க்காலில் வரும் நீரை அப்படியே வாரி பருகுகிறான். இது இன்றைய மக்களாகிய நமக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணலாம். ஆனால், அன்று மக்கள் நீர் நிலைகளை சுத்தமாக பராமரித்தார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.



விவசாயிகள் உழவு பாட்டு பாடுகிறார்கள்.
பெண்கள் நடவு பாட்டு பாடுகிறார்கள்.
நமது நாயகன் வந்தியத்தேவன் இதையெல்லாம் பார்த்தும், கேட்டும்,
ரசித்துக்கொண்டும் வருகிறான்.



ஆகா... எத்தனை பெரிய ஏரி! கடல் போல் அல்லவா பரந்து விரிந்திருக்கிறது, இராஜாதித்தருக்கு இணை இராஜாதித்தர் தான்.
இந்த சோழ மன்னர்களே வித்தியாசமானவர்கள் தான். அவர்கள் வீரத்தில் எப்படியோ அப்படியே அறத்திலும், அறத்தில் எப்படியோ அப்படியே தெய்வ பக்தியிலும் சிறந்தவர்கள்.


கைய நீட்டு...



சிந்தாம சாப்பிடுங்க...
தம்பி...


ஆகா! சோழநாட்டு பெண்கள் அழகானவர்கள் என்று கேள்விப்பட்டதுண்டு. ஆனால், இங்கு இருக்கும் ஒவ்வொரு பெண்ணும் தேவதை போல் அல்லவா காட்சி அளிக்கிறார்கள்! நம் கூடாரத்தை இங்கேயே அடித்து விட வேண்டியது தான்.
என்னடி, எல்லோரும் அந்த குதிரை மேல் இருக்கும் வீரனையே பாக்குறீங்க! அவன் என்ன மன்மதனா? இல்ல சுந்தர சோழனா...?
ஏய்.... கொஞ்சம் சும்மா இருடி அப்புறம் பேசலாம்.



தம்பி... நான் கூப்பிடுவது காதுல விழலயா...? இந்த பாட்டி கையால கொஞ்சம் சக்கரை பொங்கல் சாப்பிடு.
இருக்கட்டும் பாட்டி... பக்கத்தில தான் என் நண்பன் வீடு...
அப்போது தூரத்தில் படகுகள் வருவதை வந்தியத்தேவன் பார்க்கிறான்.
என்ன இவ்வளவு படகுகள் வருகின்றன?



ஐயா, அந்த படகுல யார் வருகிறார்கள்?
என்ன தம்பி இது கூட தெரியாதா... ? அந்த படகுல என்ன சின்னம் போட்டிருக்கு பாரு...
பனை மரச் சின்னம் !
இவனைப் பார்த்ததும் வெளியூர் என்று யூகித்த பெரியவர்.
தம்பி வெளியூரா ? அதான்... அதுல பெரிய பழுவேட்டரையர் வராரு, இந்த அறுபது பிராயத்துக்கு பின்னும் எவ்வளவு துடிப்பா இருப்பாரு பாரு... அவரை பார்த்தா கோழையும் வீரனாயிருவான்ல...


ஆகா... என்ன என் அதிர்ஷ்டம்! அந்த மகா வீரரை சந்திக்க வேண்டும் என்று வெகு காலமாக எண்ணி இருந்தேன். நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இல்லை, இல்லை, இளவரசர் கரிகாலர் கூறியதை மறந்துவிட்டோமே... பழுவேட்டரையர்களின் கண்ணில் அகப்படாமல் அல்லவா நான் இந்த ஓலையை எடுத்துச்செல்ல வேண்டும்.
ஆம், நாம் அவரை சந்திக்காமல் இருப்பது தான் நல்லது. அவர்கள் செல்லும் வரை இந்த மரத்தின் மறைவில் நிற்போம். என்ன இது, நம்ம குணத்திற்கு மாறாக கோழையைப் போல் மறைந்து செல்ல வேண்டியிருக்கிறதே...!
என்று மனம் வருந்துகிறான் நம் நாயகன். வீரன் அல்லவா அவன்.



ஏன்னா, பார்த்தேளா ? பெரிய பழுவேட்டரையர் புதுசா கலியாணம் ஆன மாப்பிள்ளை மாதிரி இல்ல இருக்காரு!
ஏண்டி வாய மூடிண்டு இருக்கியா... அவா சங்கதியெல்லாம் நமக்கு எதுக்கு?
இவர் தான் பெரிய பழுவேட்டரையரா?
ஆமா... இவர் தான்.
பெரிய பழுவேட்டரையர் சமீபத்துல நந்தினி என்ற இளம் வயதுப் பெண்ணை திருமணம் செய்து கொண்டார். அதை மக்கள் அரசல் புரசலாக பேசிக்கொள்கிறார்கள்.



பழுவேட்டரையருக்காக காத்திருக்கும் பரிவாரங்களைக் கண்ட வந்தியத்தேவன்,
ஆகா.. இது அல்லவோ வரவேற்பு !
பழுவேட்டரையர் யானையின் மேல் அமர்ந்து செல்கிறார்.



என் வெகுநாள் ஆசைகள் கூடிய விரைவில் நிறைவேற போகுது. சுந்தர சோழ மகாராஜாவையும், இளவரசி குந்தவையையும் சந்திக்க போகிறேன். வழியில் தடை நேராமல் இருக்க வேண்டும்... எந்த தடை நேர்ந்தால் என்ன! கையில் வாள் இருக்கிறது, நெஞ்சில் துணிவு இருக்கிறது, பிறகு நமக்கு என்ன கவலை.
ம்... இவைகள் எல்லாம் இருந்தும் என்ன பலன். இளவரசர் கரிகாலர் நம் கையை கட்டிப்போட்டுவிட்டாரே... ஒப்புவித்த காரியம் முடியும் வரை யாரிடமும் சண்டை பிடிக்க கூடாது என்று கூறிவிட்டாரே... எப்படியோ இதுவரை நாம் அதை கடைபிடித்து விட்டோம்.
நண்பா, தலைநகர் தஞ்சைக்கு எப்போதாவது நீ வருவதாக இருந்தால் அவசியம் கடம்பூரில் உள்ள என் வீட்டுக்கு வர வேண்டும். (கந்தமாறன்)
இன்று ஆதவன் மறைவதற் குள் எப்படியும் கடம்பூர் சென்று விட வேண்டும்.






வந்தியத்தேவன் வீராணத்திலிருந்து கடம்பூருக்கு விண்ணகரக் கோயில் வழியாக செல்கிறான். அப்பொழுது அங்கு விவாதம் நடைபெறுகிறது. அதை அவன் கவனிக்கிறான். அக்காலத்தில் சமய சண்டைகள் ஆங்காங்கு நடைபெறுவது வழக்கம். விவாதம் எங்கெல்லாம் நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் நம் ஆழ்வார்க்கடியான் இருப்பான். அவன் ஒரு விஷ்ணு பக்தன். இந்த விவாதத்திலேயும் இருப்பான். வாருங்கள் அருகே சென்று பார்க்கலாம்...





ஓய் நம்பி...
என்ன? சொல்லுங்காணும்...
சிவபெருமானுடைய முடியைக் காண்பதற்கு பிரம்மாவும்,
அடியை காண்பதற்கு திருமாலும் முயன்றார்களா இல்
லையா? முடியும், அடியும் காணாமல் இருவரும் வந்து
சிவபெருமானுடைய பாதங்களில் சரணாகதி அடைந்தார்
களா இல்லையா..?


சரிதாங்காணும், நிறுத்தும் உம் பேச்சை! இராவணனுக்கு உம் முடைய சிவன் வரம் கொடுத்தாரே... அந்த வரங்கள் எல்லாம் எங்கள் திருமாலின் அவதாரமாகிய இராம பிரானின் முன்னால் தவிடுபொடி யாகப் போகவில்லையா?



வேதாந்தி அவர்களை இடைமறித்து...
நீங்கள் இருவரும் எதற்காக வீணில் வாதம் இருகிறீர்கள். சிவன் பெரிய தெய்வமா? விஷ்ணு பெரிய தெய்வமா? என்று எத்தனை நேரம் நீங்கள் வாதித்தாலும் விவகாரம் தீராது.


இந்தக் கேள்விக்கு பதில் வேதாந்தம் சொல்கிறது. நீங்கள் கீழான பக்தி மார்க்கத்தில் இருக்கின்ற வரையில் தான் சிவன், விஷ்ணு என்று சண்டையிடுவீர்கள். பக்திக்கு மேலே ஞானமார்க்கம் இருக்கிறது, ஞானத்துக்கு மேலே ஞாலம் என்று ஒன்று இருக்கிறது. அந்த நிலையை அடைந்து விட்டால் சிவனும் இல்லை... விஷ்ணுவும் இல்லை....



ஓய் சன்யாசி, நிறுத்தும்! உம்முடைய சங்கராச்சாரியார் அவ்வளவு உபநிஷதங்களுக்கும், பகவத்கீதைக்கும், பிரம்ம சூத்திரத்துக்கும் பாஷ்யம் எழுதிவிட்டு கடைசியில் என்ன சொன்னார் தெரியுமா?
"பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்
பஜ கோவிந்தம் மூடமதே"
என்று உம்மைப் போன்ற மௌடீகர்களைப்
பார்த்துத்தான் மூடமதே என்று சொன்னார்.
அடே, முன் குடுமி நம்பி.



என்னை மூடமதி என்று சொன்னது சரி தான். ஏனென்றால், உன் கையில் வெறுந்தடியை வைத்துக் கொண்டிருக்கும் நீ, வெறுந்தடியன் ஆகிறாய். உன்னை போன்ற வெறுந்தடியனோடு பேச வந்தது என்னுடைய மூடமதியினால் தானே?
கோவமாக! ஆழ்வார்க்கடியான் தடியை சுற்றிக்கொண்டு,
ஓய் சுவாமிகளே! என் கையில் வைத்திருப்பது வெறுந்தடியல்ல உம் மொட்டை மண்டையை உடைக்கும் சக்தி உடையதுங்காணும்.
மக்கள்...
அந்த வைஷ்ணவன பார்த்திங்களா! எப்படி முரட்டுத்தனமா பேசுறான். அரசாங்கத்தில் ஏதோ முக்கிய பதவி யில் இருப்பான் போல் இருக்கிறது.
இருக்கும்... இருக்கும்...


அப்பனே நிறுத்திக்கொள், தடி உன்னுடைய கையிலேயே இருக்கட்டும். அப்படியே நீ உன் கைத்தடியால் என்னை அடித்தாலும், அதற்காக நான் கோபங் கொள்ளமாட்டேன். உன்னுடன் சண்டைக்கு வரவும் மாட்டேன். அடிப்பதும் பிரம்மம், அடிபடுவதும் பிரம்மம். என்னை நீ அடித்தால் உன்னையே அடித்துக் கொள்கிறவனாவாய்.
ஆழ்வார்க்கடியானுக்கு கோவம் வருகிறது.


ஆழ்வார்க்கடியான் பொது மக்களைப் பார்த்து...
இதோ! எல்லோரும் பாருங்கள், பிரம்மத்தை
பரப்பிரம்மம் திருச்சாத்துச் சாத்தப் போகிறது.
என்னை நானே தடி கொண்டு தாக்கப் போகிறேன்.
ஆழ்வார்க்கடியான் தன்னை அடிக்க தயாராவதை அறிந்த
வேதாந்தி, அவ்விடத்தை விட்டு பக்குவமாக வெளியேறுகிறார்.


தடியை சுழற்றியவாறு...
எங்கே அந்த வேதாந்தி, ஓடி விட்டானா?


எதிரில் இருக்கும் சிவனடியாரை பார்த்து...
ஓய் பாததூளி பட்டரே! நீர் என்ன சொல்லுகிறீர்? மேலும் வாதம் செய்ய விரும்புகிறீரா? அல்லது சுவாமியாரைப் போல் நீரும் ஓட்டம் எடுக்கிறீரா?


(சிவனடியார் நையாண்டியாக...) நானா? ஒரு நாளும் அந்த வேதாந்தியைப் போல் ஓட்டம் எடுக்க மாட்டேன். என்னையும் கண்ணன் என்று நினைத்தீரா? கோபியர் வீட்டில் வெண்ணெய் திருடி உண்டு, மத்தால் அடிபட்டவன் தானே உம்முடைய கண்ணன்!
ஏன் காணும்? உம்முடைய பரமசிவன் பிட்டுக்கு மண் சுமந்து முதுகில் அடிபட்டதை மறந்துவிட்டீரா?


ஆழ்வார்க்கடியான் விவாதம் செய்யும் போது மற்றவர்களை தன் தடியை வைத்து மிரட்டுவதை கண்ட வந்தியத்தேவனுக்கு கோபம் வருகிறது.
அவன் தடியை பிடுங்கி, அவனை நாலு சாத்து சாத்தலாமா...!
இந்த மூட சண்டையை எப்படியும் தடுத்து நிறுத்த வேண்டும்!